**அக்டோபர் - 28**

**"கர்த்தராகிய தேவனுடைய ஆவியானவர் என்மேல் இருக்கிறார்...என்னை அபிஷேகம் பண்ணினார்... துயரப்பட்ட அனைவருக்கும் ஆறுதல் செய்யவும் சாம்பலுக்குப் பதிலாக சிங்காரத்தையும், துயரத்துக்குப் பதிலாக ஆனந்தத் தைலத்தையும் கொடுக்கவும் என்னை அனுப்பினார்." - ஏசா 61 : 1 - 3.**

தங்களுடைய சொந்தத் தவறுகளையும், பலவீனங்களையும், உண்மையாக மதிக்கிறவர்களும், அடைக்கலத்துக்காகவும், விடுதலைக்காகவும் தேடிக்கொண்டிருக்கிறவர்களுமான சாந்த குணமுள்ளவர்களையும், துயரப்படுகிறவர்களையும், நாடித் தேடுவதே நமது அதிகாரம் பெற்ற வேலையாயிருக்கிறது. உலகத்தின் பாவத்தை நிவர்த்தி செய்கிற தேவ ஆட்டுக்குட்டியையும், மரணத்தின் சாம்பலுக்குப் பதிலாக உயிர்த்தெழுதலின் சிங்காரத்தையும், இப்பொழுதிருக்கிற காலத்தின் ஒழுங்கின் ஆவியையும், ஏமாற்றமும், மனத்துயரமும், உபத்திரவமும் இருக்கிற இடத்தில் கொஞ்சக்காலம், சென்று திரும்ப ஸ்தாபிக்கப்படப் போகிறதும், கர்த்தர் வாக்குத்தத்தம் செய்திருக்கிறதுமான அந்த மகிமையையும், அவர்களுக்குச் சுட்டிக் காட்டுவதே நமது வேலையின் பாரமாயிருக்கிறது. "விடியற்காலத்திலே களிப்புண்டாகும்" என்பதை இப்படிப்பட்டவர்களுக்குச் சொல்லுவதும், அவர்கள் எழுந்து உடனே துதியின் உடையை உடுத்திக்கொண்டு "நம்முடைய தேவனுடைய கிருபையின் புதுப்பாட்டை தங்களுடைய வாயில்" கொண்டு புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடக்க ஆரம்பிக்க அவர்களுக்கு உதவி செய்வதும், நமது வேலையாயிருக்கிறது. -
**Z ’04, 295 (R 3434)**

தேவனுடைய பரிசுத்த இருதயமும் மனதும் தமது பிரதிஷ்டை செய்த ஜனங்களின் மேலே உள்ளது. ஊழியத்திற்காக இதுவே அவர்களுடைய யோக்கியதாம்சமாக இருக்கிறது. தங்களுடைய ஊழியம் சம்பந்தமாகவுள்ள பலிகளை தேவனுக்குப் பிரியமானதாக நிறைவேற்ற, விசுவாசம், நம்பிக்கை, அன்பு, கீழ்ப்படிதல் ஆகிய இவைகளுக்காக வேண்டிய திரணிகள், இந்த ஆவியினாலே இருதயத்துக்குக் கொடுக்கப்படுகிறது போல, இந்த ஆவியினாலே ஆவிக்குரிய காரியங்களை உணர்ந்தறியவும், நினைவில் வைக்கவும், விவாதித்து ஒப்புக்கொள்ளவும், தெரிவிக்கவும் அவர்களுடைய மனதிற்கு சக்தி கொடுக்கிறது. உண்மையாகவே இந்த ஆவி துக்கங் கொண்டாடுகிற சியோனின் பிரிய ஜனங்களுக்கு ஆறுதலளிக்கவும், அவர்களை துக்கத்தின் சாம்பலிலிருந்து எடுத்துப் பரிசுத்தத்தின் சிங்காரத்திற்குள்ளும், கர்த்தரின் ஆனந்தத்திற்கும் கொண்டுவர அவர்களை சாத்தியமாக்குகிறது. **- P ’26, 156.**

**ஒத்த வாக்கியங்கள் :-**

**மத் 3:16,17; அப் 10:38; 4:1-4; 2கொரி 1:21,22; 1யோவா 2:20,27; சங் 119:50,52,54,92,143; 147:3; ஏசா 40:1,2; 51:3,12; யோவா 16:33; 2கொரி 1:2-7; எபே 9:3,4; 1தெச 4:18.**

**கோபுர வாசிப்பு : Z ’14, 277 (R 5536)**

**வினாக்கள் : இந்த வாரத்தில் நான் மற்றவர்களை ஆறுதல்படுத்தி மகிழ்வித்தேனோ? எப்படி? ஏன்? எந்த சந்தர்ப்பங்களில்?**